# விஞ்ஞான அணுகுமுறை



# விஞ்ஞான அணுகுமுறை



அரசறிவியல் பரந்த விடயப் பரப்புக்களை உள்ளடக்கியுள்ளதால் ஆய்வு முறைகளும் அதற்கு நீண்ட வரலாற்றை கொண்டவை. அந்த வகையில் 20 ஆம் நூற்றாண்டில் சமூகவியல் மற்றும் மானிடவியல் துறைகளில் ஏற்பட்ட விருத்தி காரணமாக தோற்றம் பெற்ற அணுகுமுறையே விஞ்ஞான (நடத்தை வாத) அணுகுமுறையாகும்.



இது 1930 ஆம் தசாப்தங்களிலும் 1940 தசாப்தங்களிலும் அமெரிக்க அரசறிவியலாளர் குழுவொன்றினால் விஞ்ஞான விதிமுறைகளை பயன்படுத்தி அரசியலை ஆய்வு செய்ததனால் தோற்றம் பெற்றது.



இவ் அணுமுறையில் செய்யப்படும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் என்பவற்றில் செய்யப்படும் ஆய்வுகளில் செல்லுபடியான தன்மை, நம்பகத்தன்மை, மற்றும் சரியான அறிவினை கட்டியெழுப்பல் அவற்றின் முறைகளை விங்ஞான ரீதியான திசைக்கு மாற்றல் பொருளாதார சமூகவியளார்களின் வேரூன்றியிருந்த சிந்தனை விஞ்ஞான ரீதியான மற்றும் மெய்ப்பிக்கக்கூடிய விதிமுறையே இவ்வணுகுமுறையாகும்.

தொகுப்பு :- திருமதி. றஞ்சினி பாலகரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**I**

விஞ்ஞான அணுகுமுறையின் மூலக் கொள்கைகள் அனுபவ ரீதியான ஆய்வுகளிலிருந்து பெறப்படும் விடயங்கள், சான்றுகள், தரவுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் அறிவினை உருவாக்குவதே சமூக - அரசியல் கற்கையின் இலக்காக இருக்க வேண்டும்.

**II**

விஞ்ஞான ரீதியான கட்டியெழுப்பப்படும் சமூக - அரசியல் விபரிப்பு நோக்கம் சார்ந்ததாக இருக்கவேண்டும்.

**III**

சமூக - அரசியல் தோற்றப்படுகள் தொடர்பில் கட்டியெழுப்பப்பட்டுள்ள அறிவு, மற்றும் முடிவுகள், பெறுமானங்களின் முடிவுகள் இன்றி இருத்தல் வேண்டும்.

**IV**

ஏதேனும் தோற்றப்பாடு தொடர்பாக ஆராயும் போது மெய்பிக்கக் கூடிய மற்றும் நோக்கமைந்த தரவுகள், சான்றுப்படுத்தலை மையப்படுத்தி மட்டும் பகுப்பாய்வு செய்தல் கண்காணிப்பு மற்றும் முடிவுகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

**V**

இதன் மூலக்கொள்கை பெறுமானங்கள் விடுவிக்கப்பட்ட அறிவு என்பதாகும்.

தொகுப்பு :- திருமதி. றஞ்சினி பாலகரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



விஞ்ஞான அனுகுமுறையும் நடத்ததைவாதமும் அரசறிவியலில் நெருங்கிய தொடர்புடையதாகும்.

மனிதனுடைய நடத்தையை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்தல் நடத்தைவாதம்.



மெய்ப்பிக்கக்கூடிய ஆய்வுக்கு உட்படுத்தக் கூடிய உலகத்தை சமூகத்தின் தனிநபர்களின் அரசியல் நடத்தை தாக்கம் செலுத்தும் விடயங்கள் நடத்தை வாதத்தின் பிரதான தர்க்கமாக இருந்தது.

## அண்மைக்கால போக்கு

- நடத்தை வாதமானது அண்மைக் காலத்தில் பிரசைகள் அரசியலில் பங்குபற்றல் தொடர்பில் ஆய்வு செய்வதே நோக்காக உள்ளது.
- மெய்பிக்கக்கூடிய ஆய்வுகளின் மூலம் பகுப்பாய்வு செய்யக்கூடிய செயற்பாடாகும். இதனை அமெரிக்க நடத்தை வாதிகள் அக்கறை காட்டி வருகின்றனர்.
- இவ் நடத்தை வாதமானது 1920 களில் ஆரம்பிக்கப்பட்டாலும் 1950 - 1960 களில் அனைத்தையும் கட்டுப்படுத்தும் பிரிவாக மாறினாலும் 1970 களில் பின் பின்னடைவாக உள்ளது.
- இம் மாற்றத்திற்கு மாக்சிசவாதம் - நவமாக்சிசவாதம் - லிபரல்வாதம் - தத்துவார்த்த, பெண்ணியல்வாதம் மற்றும் பின் நவீனதுவவாதம் போன்ற பாடத்துறைகளினால் ஏற்பட்ட சவால்கள் காரணமாயின எனலாம்.

தொகுப்பு :- திருமதி. நஞ்சினி பாலகரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## இவ்வகுமுறையின் நன்மைகளாக

- மனிதனும் மனித குழுக்களும் முக்கியம் பெறுகின்றன.
- அரசறிவியலின் இயக்க வரலாற்றை இவ்வணுகுமுறை ஆய்வு செய்கின்றது.
- அரசியல் நிறுவன கட்டமைப்பை ஆய்வு செய்யாமல் அதன் நடைமுறைப் பயன்பாட்டை ஆய்வுசெய்கிறது.
- துண்யிடை அணுகுமுறையை கொண்டிருத்தல்
- இவ்வணுமுறையாலேயே அரசியல் என்ற மரபுசார் நாமம் அரசியல் விஞ்ஞானம் எனப்படுகின்றது.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வினாக்கள்



**01** நடத்தை வாத அணுகுமுறையை ஆதரித்த அறிஞர்கள் இருவரின் பெயர்களை குறிப்பிடுக.

**02** விஞ்ஞான அணுகுமுறையின் மூலக்கொள்கையும் நடத்தைவாதம் தோற்றம் பெற்ற காலப் பகுதியையும் குறிப்பிடுக?

**03** அரசறிவியலில் விஞ்ஞான அணுகுமுறையை ஆராய்க.

தொகுப்பு :- திருமதி. நஞ்சினி பாலகரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk